செ.வெ.எண்:54/செப்டம்பர்/2019 நாள்:16.09.2019

**திருச்சிராப்பள்ளி மாவட்டம் லால்குடி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் வருகின்ற (26.09.2019) சிறப்பு குறைதீர்க்கும் கூட்டம் நடைபெறவுள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

--------------

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வருவாய் கோட்ட அளவில் பொதுமக்கள் தங்களது குறைகளை தெரிவிக்கும் வகையில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் சிறப்பு குறைதீர்க்கும் நாள் மற்றும் ஆய்வுகூட்டம் இலால்குடி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் 26.09..2019 (வியாழன்கிழமை)அன்று காலை 11.00 மணிக்கு நடைபெற உள்ளது. பொதுமக்கள் தங்களது கோரிக்கையினை மனுவில் குறிப்பிட்டு நேரிடையாக மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் அளிக்கலாம். அவ்வாறு பொதுமக்களால் அளிக்கப்படும் கோரிக்கை மனுக்கள் அனைத்து துறை சார்ந்த அலுவலர்களால் பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்க ஆவண செய்யப்படும். எனவே, இலால்குடி கோட்டத்திற்கு உட்பட்ட இலால்குடி,மண்ணச்சநல்லூர் வட்டங்களை சேர்ந்த பொதுமக்கள் இந்த சிறப்பு குறைதீர்க்கும் நாளில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**